©
GOVERNMENT OF TAMIL NADU
2019

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 10] CHENNAI, WEDNESDAY, MARCH 6, 2019
Maasi 22, Vilambi, Thiruvalluvar Aandu–2050

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| **நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை** | |
| நிலங்களை கையகப்படுத்துதல் பற்றிய அறிவிக்கை | 266-267 |
| HOME DEPARTMENT | |
| Code of Criminal Procedure.—Constitution of Special Court at Chennai for dealing with cases of Fake Indian Currency and Fake Stamp Papers. .. .. .. | 267 |
| Family Courts Act.—Appointment on Transfer of Certain official Posted as Judge of the Family Court, Thanjavur .. .. .. | 267 |
| **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை** | |
| Labour Courts for Adjudication. .. .. | 267-269 |
| Minimum Wages Act.—Draft Notifcation Regarding the Revision of Minimum Rates of Wages for the Employment in Automobile Workshops .. .. .. | |
| திருத்த அறிவிக்கை | 269 |

# NOTIFICATIONS BY GOVERNMENT

**நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை**

**நிலங்களை கையகப்படுத்துதல் பற்றிய அறிவிக்கை**

*[அரசாணை (டி) எண் 22, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.1)த் துறை, 31 ஜனவரி 2019, தை 17, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No. II(2)/HWMP/206/2019.—காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், நெ.134 ஒரகடம் கிராமத்தில் கீழ்க்காணும் விபர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான நிலங்கள் ஒரு பொது நோக்கத்திற்காக அதாவது திருப்பெரும்புதூர் முதல் சிங்கபெருமாள் கோயில் வரை சாலை அகலப்படுத்தும் பணிக்காக தேவைப்படுகின்றது என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கருதுவதால், நெ.134 ஒரகடம் கிராமத்தில் கீழ்க்காணும் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளதுமான 3180 ச.மீ. புன்செய் நிலங்களை கையகப்படுத்தவும், மேற்படி நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை நெடுஞ்சாலைத் துறையின், தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்களால் பராமரிக்கப்படும் வைப்புக்கணக்கிலிருந்து வழங்கவும், தீர்மானித்து மேற்காணும் நிலங்களின் உரிமையாளர், உரிமை கோருபவர், அனுபவத்தில் வைத்துள்ளவர்கள் அளித்த காரணங்களையும் பரிசீலனை செய்தபின் 2001ம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் பிரிவு 15(1) (தமிழ்நாடு சட்டம் 34/2002)ன்படி கீழ்க்காணும் அறிவிப்பு பிரசுரம் செய்யப்படுகிறது.

**அறிவிப்பு**

தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், பிரிவு 15(1) (தமிழ்நாடு சட்டம் 34/2002)ல் அறிவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், நெ.134 ஒரகடம் கிராமத்தில் திருப்பெரும்புதூர் முதல் சிங்கபெருமாள் கோயில் வரையிலான சாலை அகலப்படுத்தும் திட்டத்திற்காக கீழ்க்காணும் விபர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 3180 ச.மீ. புன்செய் நிலங்கள் கையகம் செய்யப்படுகிறது என இதன் மூலம் அறிவிக்கின்றார்.

இந்நிலங்களின் வரைபடங்கள் தனிவட்டாட்சியர் (நிலஎடுப்பு), ஒரகடம் தொழிற்பூங்கா சாலை உள்கட்டமைப்பு திட்டம், காஞ்சிபுரம் அவர்களின் அலுவலகத்தில் உள்ளது. அவற்றை அலுவலக நேரங்களில் எப்போது வேண்டுமானாலும் பார்வையிடலாம்.

**அட்டவணை**

*மாவட்டம்–காஞ்சிபுரம், வட்டம்–திருப்பெரும்புதூர் கிராமம்–நெ. 134. ஒரகடம்.*

1) வடக்கில் புல எண்.33, கிழக்கில் புல எண் 37, தெற்கில் புல எண் 34/4பி, 34/8, மேற்கில் 34/1ஏ1 பகுதி, 34/5, பட்டா எண் 3248, சிப்காட் டாசிட் டிவிஷன் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 34/1ஏ1 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் 34/12 நில அளவை கொண்ட ரயத்து மானாவாரி நிலம். காலி.

பரப்பு 01095 சதுரமீட்டர்

2) வடக்கில் புல எண். 34/4பி, கிழக்கில் புல எண் 34/4பி, தெற்கில் புல எண். 34/5, மேற்கில் 34/4ஏ பகுதி, பட்டா எண் 3946, சாந்தலிங்கம் த/பெ கண்ணப்பா முதலியார் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண்.34/4ஏ பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண். 34/14 நில அளவை கொண்ட புஞ்சை நிலம். காலி.

பரப்பு 00113 சதுரமீட்டர்

3) வடக்கில் புல எண் 34/1ஏ1, கிழக்கில் புல எண் 34/1ஏ1, தெற்கில் புல எண் 34/1ஏ1, மேற்கில் 34/4பி பகுதி, பட்டா எண்.1131, சாந்தலிங்கம் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண்.34/4பி பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண்.34/13 நில அளவை கொண்ட புஞ்சை நிலம். தளம் போட்ட கட்டிடம் தரை மற்றும் முதல் தளம், மதில்சுவர், தென்னை–1.

பரப்பு 00267சதுரமீட்டர்

4) வடக்கில் புல எண் 34, கிழக்கில் புல எண் 34/1ஏ1, தெற்கில் புல எண் 34/7, மேற்கில் 34/5 பகுதி, பட்டா எண் 708, ஜெயராம நாயுடு மகன் ஸ்ரீதர் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண்.34/5 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் 34/15 நில அளவை கொண்ட புஞ்சை நிலம். தகர ஷீட் போட்ட செங்கல் கட்டிடம்.

பரப்பு 00573 சதுரமீட்டர்

5) வடக்கில் புல எண் 35, கிழக்கில் புல எண் 44/1, தெற்கில் புல எண் 44/2பி1, மேற்கில் 44/9 பகுதி, பட்டா எண் 2848, பெருமாள் மகன் அப்பாவு என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 44/2ஏ உட்பிரிவிற்கு பின் புல எண் 44/2ஏ நில அளவை கொண்ட ரயத்து மானாவாரி நிலம். சிமெண்ட் ஷீட் ஷெட் கடை – 2.

பரப்பு 00160 சதுரமீட்டர்

6) வடக்கில் புல எண் 44/2ஏ, கிழக்கில் புல எண் 44/1, தெற்கில் புல எண் 44/2பி2, மேற்கில் 44/10 பகுதி, பட்டா எண் 175, மாணிக்க கிராமணி மகன் கோபாலன் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 44/2பி1 உட்பிரிவிற்கு பின் புல எண் 44/2பி1 நில அளவை கொண்ட ரயத்து மானாவாரி நிலம். சிமெண்ட் ஷீட் போட்ட கட்டிடம், குளியல் அறை, வேப்பமரம்–1.

பரப்பு 00100 சதுரமீட்டர்

7) வடக்கில் புல எண் 44/2பி1, கிழக்கில் புல எண் 44/1, தெற்கில் புல எண் 44/2சி, மேற்கில்–44/11, பட்டா எண் 830, ரங்கநாத நாயுடு மனைவி பங்கஜம்மாள் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 44/2பி2 உட்பிரிவிற்கு பின் புல எண் 44/2பி2 நில அளவை கொண்ட ரயத்து மானாவாரி நிலம். மதில்சுவர், தகர ஷீட் போட்ட கடை–1.

பரப்பு 00050 சதுரமீட்டர்

8) வடக்கில் புல எண் 44/2பி2, கிழக்கில் புல எண் 44/1, தெற்கில் புல எண் 44/2டி, மேற்கில் 44/12, பட்டா எண் 347, ரங்கநாதன் மகன் மோகன் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண்.44/2சி உட்பிரிவிற்கு பின் புல எண்.44/2சி நில அளவை கொண்ட புஞ்சை நிலம். தகர ஷீட் போட்ட கடை–1.

பரப்பு 00050 சதுரமீட்டர்

9) வடக்கில் புல எண் 44/2சி, கிழக்கில் புல எண் 44/1, தெற்கில் புல எண் 44/2இ, மேற்கில் 44/13, பட்டா எண் 345, ராம்லால் மனைவி பியாரிதேவி என்பவருக்கு சொந்தமானதுமான புல எண்.44/2டி உட்பிரிவிற்கு பின் புல எண்.44/2டி நில அளவை கொண்ட புஞ்சை நிலம். தகர ஷீட் ஷெட்–1, மதில்சுவர்.

பரப்பு 00160 சதுரமீட்டர்

10) வடக்கில் புல எண் 44/2டி, கிழக்கில் புல எண் 44/1, தெற்கில் புல எண் 44/1, மேற்கில் 44/14, பட்டா எண் 4074, எம். மணி த/பெ. மாரி என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 44/2இ உட்பிரிவிற்கு பின் புல எண் 44/2இ நில அளவை கொண்ட புஞ்சை நிலம். தகர ஷீட் போட்ட கடை–2, புளியமரம் –1, அரசமரம்–1.

பரப்பு 00150 சதுரமீட்டர்

11) வடக்கில் புல எண் 44/1, கிழக்கில் புல எண் 44/8பி1, தெற்கில் புல எண் 44/8ஏ4, மேற்கில் 44/8ஏ2 பகுதி, பட்டா எண் 3258, சாந்தி க/பெ. லோகநாதன் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 44/8ஏ2 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் 44/20 நில அளவை கொண்ட புஞ்சை நிலம். காலி.

பரப்பு 00031 சதுரமீட்டர்

12) வடக்கில் புல எண். 44/8ஏ2, கிழக்கில் புல எண். 44/8பி1, தெற்கில் புல எண்.44/8ஏ3, மேற்கில் 44/8ஏ4 பகுதி, பட்டா எண் 2922, மூர்த்தி மகன் ராஜேந்திரன் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 44/8ஏ4 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் 44/21 நில அளவை கொண்ட புஞ்சை நிலம். தளம் போட்ட கடை–4, படிகட்டு.

பரப்பு 00031 சதுரமீட்டர்

13) வடக்கில் புல எண். 44/8ஏ4, கிழக்கில் புல எண் 44/8பி1, தெற்கில் புல எண் 44/8ஏ1, மேற்கில் 44/8ஏ3 பகுதி, பட்டா எண் 3259, சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 44/8ஏ3 பகுதி, உட்பிரிவிற்கு பின் புல எண் 44/22 நில அளவை கொண்ட புஞ்சை நிலம். சிமெண்ட் ஷீட் போட்ட கடை–1 பகுதி.

பரப்பு 00062 சதுரமீட்டர்

14) வடக்கில் புல எண் 57/11, கிழக்கில் புல எண் 57/13 பகுதி, தெற்கில் புல எண் 57/16, மேற்கில் 57/12, பட்டா 26, கோவிந்தராஜி பிள்ளை மகன் சுந்தரம் என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 57/13 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் 57/21 நில அளவை கொண்ட ரயத்துமனை நிலம். மதில்சுவர், குளியல்அறை, தென்னை–4, கொய்யா–1.

பரப்பு 00050 சதுரமீட்டர்

15) வடக்கில் புல எண் 57/14, கிழக்கில் புல எண் 87 & 88, தெற்கில் புல எண் 57/17, மேற்கில் 57/13, பட்டா 15, ராமானுஜ நாயுடு மகன் கோவிந்தராஜீ என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 57/15 உட்பிரிவிற்கு பின் புல எண் 57/15 நில அளவை கொண்ட ரயத்துமனை நிலம். சுவர் இல்லாத கூரை போட்டகடை, பனை மரம் –1.

பரப்பு 00130 சதுரமீட்டர்

16) வடக்கில் புல எண் 57/15, கிழக்கில் புல எண் 87 & 88, தெற்கில் புல எண் 57/2பி, மேற்கில் 57/17, பகுதி, பட்டா 25, ராமன் மகன் சக்கரபாணி என்பவருக்கு சொந்தமானதுமான புல எண் 57/17 பகுதி உட்பிரிவிற்கு பின் புல எண் 57/22 நில அளவை கொண்ட ரயத்துமனை நிலம். தளம் போட்ட வீடு–1, சிமெண்ட் ஷீட் போட்ட குளியல் அறை, தகர ஷீட் போட்ட கடை–1, தென்னை–1, மாமரம் – 1.

பரப்பு 00158 சதுரமீட்டர்

**மொத்தபரப்பு 03180 சதுரமீட்டர்**

v°. nf. Ãughf®,
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (மு.கூ.பொ.)*

HOME DEPARTMENT

**Constitution of Special Court at Chennai for dealing with cases of Fake Indian Currency and Fake Stamp Papers under the Code of Criminal Procedure**

*[G.O. Ms. No. 90, Home (Courts-II), 7th February 2019, தை 24, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு– 2050]*

No. II(2)/HO/207/2019.—In exercise of the powers conferred by sub-section (1) of Section 16 of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974)read with the proviso to sub-section (1) of Section 11 of the said code, the Governor of Tamil Nadu after consultation with the High Court, Madras hereby establishes a Court of Metropolitan Magistrate in the cadre of Senior Civil Judge at Chennai to deal with the cases of Fake Stamp Papers and Fake Indian Currency.

**Appointment on Transfer of Certain official Posted as Judge of the Family Court, Thanjavur under the Family Courts Act.**

*[G.O. (D) No. 196, Home (Courts-II), 18th February 2019, மாசி 6, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No. II(2)/HO/208/2019.—In exercise of the powers conferred by sub-section (1) of Section 4 of the Family Courts Act 1984 (Central Act 66 of 1984), the Governor of Tamil Nadu, a with the concurrence of the High Court, Madras hereby makes the following appointment on transfer.

| *Sl.No.* | *Name and Designation Thiru / Tmt / Selvi* | *Ordered to be Posted as* |
|---|---|---|
| 1. | Thiru M. Ravindran, III Additional District Judge, Thanjavur @ Pattukottai | Judge, Family Court, Thanjavur. |

NIRANJAN MARDI,
*Additional Chief Secretary to Government.*

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை**

**Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication.**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை.**

*[அரசாணை (டி) எண் 83, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 12 பிப்ரவரி 2019, தை 29, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No. II(2)/LE/209/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்), கோவை என்ற நிர்வாகத்திற்கும் கோவை திருப்பூர் நீலகிரி மாவட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொதுத் தொழிலாளர் சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம்–XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, கோயம்புத்தூர் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோயம்புத்தூர், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. A. தங்கவேலு, முதுநிலை ஓட்டுநருக்கு (பணி எண்.C20042) ரூ.200/– பிடித்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **18–10–2016** நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**சந்திரா CFS & டெர்மினல் ஆப்ரேட்டர் பிரைவேட் லிமிடெட், மீஞ்சூர்.**

*[அரசாணை (டி) எண் 84, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 12 பிப்ரவரி 2019, தை 29, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No. II(2)/LE/210/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூரில் இயங்கிவரும் சந்திரா CFS & டெர்மினல் ஆப்ரேட்டர் பிரைவேட் லிமிடெட், என்ற நிர்வாகத்திற்கும் சென்னை ஏற்றுமதி வளாக ஊழியர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம்–XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினாக்கள்**

**(1) கோரிக்கை எண்.2 அடிப்படை சம்பளம்:**

தொழிலாளர்களை கீழ்க்கண்ட கிரேடுகளில் அமர்த்தி அடிப்படை சம்பளம், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் அனைத்து தொழிலாளர்களின் சர்வீஸின் அடிப்படையில் ஊதியத்தை கணக்கிட்டு நிர்ணயம் செய்து வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

| | | |
|---|---|---|
| 1. | TLT-OPERATOR (SR)- | 9000-8000-13000-1000-18000-1200-24000-1500-31500-1750 |
| | TLT-OPERATOR | 7500-600-10500-800-14500-1000-19500-1250-25750-1500 |
| 2. | FLT-OPERATOR (SR)- | 7000-800-11000-1000-16000-1200-22000-1400-19000-1600 |
| | FLT-OPERATOR | 6500-600-9500-800-1350-1000-18500-1200-24500-1400 |
| 3. | MECHANICS (SR) | 10000-1000-15000-1250-12150-1600-29250-2050-39500-2600 |
| | MECHANICS | 7000-800-11000-1000-16000-1200-22000-1400-29000-1600 |
| 4. | SUPERVISOR (SR) | 7500-600-10500-800-14500-1000-19500-1250-25750-1500 |
| | SUPERVISOR | 6500-600-9000-700-12500-900-17000-1100-22500-1300 |
| 5. | ELECTRICIAN | 9000-800-13000-1000-18000-1200-24000-1500-31500-1750 |
| 6. | TALLY CLERK (SR) | 5000-500-7500-600-10500-800-14500-800-14500-1000-19500-1200 |
| | TALLY CLERK | 4500-400-6500-600-9500-800-13500-1000-18500-1200 |
| 7. | TLT-FLT-CLEANERS HELPER | 3500-400-5500-600-8500-700-12000-800-14000-1000 |
| 8. | STORE KEEPER | 4500-400-6500-600-9500-800-13500-1000-18500-1200 |

**(2) கோரிக்கை எண்.3 D.A. (பஞ்சப்படி) :**

1960–ம் ஆண்டு விலைவாசி புள்ளியின் அடிப்படையில் 3000 புள்ளிகளுக்கு ரூ.4000/–நிலையான பஞ்சப்படியாகவும், 3000 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் தலா ரூ.3/– மாறும் பஞ்சப்படியாக வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில், உரிய உத்தரவு பிறப்பிக்க.

**(3) கோரிக்கை எண்.4. அலவன்ஸ்கள் :**

தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாத அடிப்படை சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் கூட்டு தொகையில் வாடகைப்படியாக 30% கண்வெயின்ஸ் அலவன்ஸ் 20% மெடிக்கல் அலவன்ஸ் 30% லீவ் டிராவல் அலவன்ஸ் 10% மற்றும் ஜெனரல் அலவன்ஸ் 10% வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

**(4) கோரிக்கை எண்.5.ஷிப்ட் அலவன்ஸ் :**

அடிப்படை சம்பளம் 25% தொகையினை 3–வது ஷிப்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், 15% தொகையினை 2வது ஷிப்டில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**(5) கோரிக்கை எண்.6.(பகுதி) அட்டண்ட்டன்ஸ் போனஸ் :**

தொழிலாளர்கள் மாதத்தில் 2 நாள் விடுப்பு எடுத்தாலும் மாதந்தோறும் ரூ.1000/–அட்டண்டன்ஸ் போனஸ் வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**(6) கோரிக்கை எண்.9.கல்விப்படி :**

தொழிலாளர்களுக்கு கல்விப்படியாக ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் தலா ரூ.10,000/– வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**(7) கோரிக்கை எண்.13.போனஸ் :**

2014–15 மற்றும் 2015–16ம் நிதியாண்டிற்கு 20% போனஸ் மற்றும் கருணைத்தொகை ரூ.10,000/–வழங்க கோரும் தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

Verified © Realstore

**(8) கோரிக்கை எண்.16. ரெயின் கோர்ட் :**

தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை மழை கோட் வழங்க கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்க.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கும்பகோணம் கோட்டம், நாகை மண்டலம்.**

*[அரசாணை (டி) எண் 86, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 12 பிப்ரவரி 2019, தை 29, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/211/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கும்பகோணம் கோட்டம், நாகை மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சங்கம், கும்பகோணம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம்–XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எ. கோவிந்தராஜ், (பணி எண். 06CR010), நடத்துநர், 24–08–2007 அன்றுடன் 240 நாட்கள் பணி நிறைவு செய்திருந்தும், அவருக்கு 25–08–2007 முதல் பணி நிரந்தர ஆணை வழங்காமல், காலதாமதமாக 01–10–2007 முதல் பணி நிறைவு செய்து வழங்கியுள்ள உத்தரவினை ரத்து செய்து, 25–08–2007 முதல் நிரந்தரப்படுத்தி ஆணை வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 87, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 12 பிப்ரவரி 2019, தை 29, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]*

No.II(2)/LE/212/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் லிமிடெட், கும்பகோணம் கோட்டம், நாகை மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சங்கம், கும்பகோணம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம்–XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின் கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. பி. பக்கிரிசாமி, (பணி எண். 06DR091), ஓட்டுநர், 16–08–2007 அன்றுடன் 240 நாட்கள் பணி நிறைவு செய்திருந்தும், அவருக்கு 17–08–2007 முதல் பணி நிரந்தர ஆணை வழங்காமல், காலதாமதமாக 01–09–2007 முதல் பணி நிறைவு செய்து வழங்கியுள்ள உத்தரவினை ரத்து செய்து, 17–08–2007 முதல் நிரந்தரப்படுத்தி ஆணை வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆமெனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**சுனீல் பாலீவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**Draft Notification Regarding the Revision of Minimum Rates of Wages for the Employment in Automobile Workshops under the Minimum Wages Act.**

**திருத்த அறிவிக்கை.**

*[கடித எண் 24554/ஜெ1/2018–1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, 23 ஜனவரி 2019.]*

**தமிழ்நாடு அரசிதழ்** வெளியீடு எண் 45, நாள் 7–11–2018, பாகம் II—பிரிவு 2–ல் பக்க எண் 1002–1003, அறிவிக்கை எண் No. II(2)/LE/951/2018, அரசாணை (2D) எண். 89, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜெ1)த் துறை, நாள் 5–10–2018–க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**திருத்தம்**

அரசாணை (2D) No. 89, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை நாள் 5–10–2018–ல் பக்க எண் 1003–ல் உள்ள அட்டவணையில் Classes of Employees என்ற தலைப்பின் கீழ் IV Semi Skilled என்ற வகைப்பாட்டில் கீழ்க்கண்ட தொழிலாளர்களின் வகைகளுக்கு கலம் 2–ல் Zone B–க்கு (All types of Municipalities ) குறைந்தபட்ச அடிப்படை ஊதியம்

" (1) Assistant fitter
(2) Assistant Blacksmith
(3) Assistant Tinker
(4) Assistant Electrician
} 8039.00"

என்றிருப்பதை

" (1) Assistant fitter
(2) Assistant Blacksmith
(3) Assistant Tinker
(4) Assistant Electrician
} 8036.00"

என திருத்தி வாசிக்கவும்.

**சு. அமிர்தஜோதி,**
*அரசு துணைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU